சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.

I.A.No.

MCOP.NO.186/2018

I.A.No.

HMOP.NO.

வாதி / பிரதிவாதி ம.சா.1 வது சாட்சி உதவியாளர் திரு.சுப்பிரமணியன் அவர்களால் 44/1969 பிரிவின்படி 10.01.2020 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :கௌசல்யா | கிராமம் | :குளித்தலை |
| த/பெ | :மணி | தாலூக்கா | :குளித்தலை |
| மதம் | :இந்து | தொழில் | : - |
| ஜாதி | :பத்மசாலியர் | வயது | :21 |

மு.வி.

நான் இந்த வழக்கின் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு 1 வது சாட்சியாவேன். எனது தரப்பு முதல் விசாரணையை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன். குளித்தலை காவல்நிலைய கு.எண்.107/2018ன் முதல்தகவல் அறிக்கை ம.சா.ஆ.1. பள்ளியில் விடுமுறை எடுத்ததற்கான சான்றிதழ் ம.சா.ஆ.2. ஆகியவற்றை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கு.வி.

விபத்து நடந்த சாலை திருச்சி – கரூர் மெயின் ரோடு என்றால் சரிதான். குளித்தலை பெரியபாலம் ஐயங்கார் பேக்கரி முன்புறம் விபத்து நடந்தது. அந்த ரோடு கிழமேல் ரோடு என்றால் சரிதான். நானும், என் தோழி ராதிகாகவும் மேற்கிலிருந்து, கிழக்காகக சென்றோம். விபத்து ஏற்படுத்திய கார் எனக்கு பின்புறம் வந்தது. ஐயங்கார் பேக்கரி ரோட்டிற்கு வடபுறம் உள்ளது. ரோட்டிற்கு வடபுறம் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். கார் ஓட்டுனர் மீது எவ்வித கவனக்குறைவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தான் கார் வருவதை கவனிக்காமல் ரோட்டை கடந்தபோது தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. விபத்துக்கு காரணம் என்னுடைய கவனக்கறைவு தான் என்றால் சரியல்ல. எனக்கு சிகிச்சை முழுவதும் அரசு மருத்துவமனையில் தான் என்றால் சரிதான். முசிறி மெட்ரிகுலேசன் பள்ளியில் வேலை செய்து மாதம் ரூ.10,000/–ம் சம்பாதித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் தற்பொழுது வேலைக்கு செல்லவில்லை. விபத்து

காயங்களினால் எனக்கு நிரந்தர ஊனமோ, வருமான இழப்போ இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டுத்தொகை அதிகமானது என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/கௌசல்யா,
ஒம்/C.ஸ்ரீதர்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.